# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்,
சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

**முறையீட்டு மனு எண். 128/மாநகராட்சி/2018**

**நாள் : 25/10/2018**

**திரு வெ. ராஜு,**
**சேலம் – 636 004.** – **முறையீட்டு மனுதாரர்**

**திரு M. பெரியசாமி,**
**மாநகராட்சி அலுவலர்,**
**சேலம்.** – **எதிர் மனுதாரர்**

சேலம் மாவட்டம், அழகாபுரம் அஞ்சல், நரசோதிபட்டி கிராமம், செங்கல் பேட்டை, எண்.148, என்ற முகவரியில் வசிக்கும் திரு வெ. ராஜு அவர்களின் 09.06.2018 நாளிட்ட முறையீட்டு மனு இம்முறைமன்ற நடுவத்தில் 11.06.2018 அன்று பெறப்பட்டு 128/2018 எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டது. முறையீட்டு மனுதாரரின் மனு, விசாரணையின் போது அவர் அளித்த வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் திரு M. பெரியசாமி அவர்களின் எழுத்துப்பூர்வ கடிதம் மற்றும் சூரமங்கலம் மண்டல அலுவலர் மற்றும் சேலம் மாநகராட்சி ஆணையரின் அறிக்கைகள் ஆகியவை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது :-

## ஆணை

சேலம் மாவட்டம், அழகாபுரம் அஞ்சல், நரசோதிபட்டி கிராமம், செங்கல் பேட்டை, எண்.148, என்ற முகவரியில் வசிக்கும் திரு வெ. ராஜு என்பவர், சேலம் மாநகராட்சி, சூரமங்கலம் வார்டு உதவி ஆணையர் அலுவலகத்தில் பணிபுரியும் திரு எம். பெரியசாமி குறித்து கீழ்க்காணும் புகார்களைத் தெரிவித்து நடவடிக்கை எடுக்க ஆணையிடக்கோரி இம்முறைமன்ற நடுவத்தில் முறையீடு செய்துள்ளார்.

(1) திரு எம். பெரியசாமி 23.02.2006 முதல் 12 வருடங்களாக சூரமங்கலம் வார்டு அலுவலகத்தில் தொடர்ந்து பணியாற்றி வருவது ;

(2) ஒரே அலுவலகத்தில் பணியாற்றிட சம்பந்தப்பட்ட அலுவலர்களுக்கு சிறப்பு கவனிப்பு செய்யப்படுவது தெளிவாகியுள்ளது ;

(3) எதிர் மனுதாரர் திரு எம். பெரியசாமி மற்றும் அவர் 12 வருடங்கள் தொடர்ந்து பணியாற்றிட துணை போன உயர் அலுவலர்கள் மீது நடவடிக்கை எடுக்கக் கோருவது.

2. முறையீட்டு மனுதாரரிடம் மேற்குறிப்பிட்ட குற்றச்சாட்டுகள் சம்பந்தமாக 21.08.2018 அன்று விசாரணை மேற்கொள்ளப்பட்டு வாக்குமூலம் பெறப்பட்டது. 12 ஆண்டுகளாக ஒரே அலுவலகத்தில் பணி புரியும் திரு எம். பெரியசாமி குறித்து உயர் அலுவலர்களுக்கு புகார் எதுவும் அனுப்பவில்லை என்றும் அதற்குக் காரணமான அவர் அங்குள்ள அரசியல்வாதிகளோடு நெருங்கிய தொடர்பு மற்றும் நட்பு ரீதியாக இருப்பதே காரணம் என்று விசாரணையின் போது தெரிவித்தார். தனக்கும் திரு எம். பெரியசாமி என்பவருக்கும் குடும்ப உறவு இல்லை என்றும் அவர் தன்னுடைய நண்பரும் இல்லை என்றும் தானும் அவரும் ஒரே கிராமத்தில் வேறு வேறு பகுதியில் வசித்து வருவதாகவும், வரித்தண்டலர் பொறுப்பில் இருந்து விடுவித்தாலும் ஒரே இடத்தில் பணிபுரிவதால் பணியிட மாறுதல் செய்ய வேண்டும் என்பதே தனது கோரிக்கை என்றும் விசாரணையின் போது தெரிவித்தார்.

3. முறையீட்டு மனுதாரரின் முறையீடு குறித்து, சூரமங்கல வார்டு அலுவலக உதவி ஆணையாளர் மற்றும் சேலம் மாநகராட்சி ஆணையாளர் தங்களது அறிக்கையினை சமர்ப்பித்துள்ளனர். திரு எம். பெரியசாமி, கோட்டம் எண்.22 வரி வசூல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்றும் உள்ளாட்சித் துறையில் அவர் செயல் திறனற்ற பணியாளர் பதவியில் உள்ளார் என்றும் பதவி உயர்வு பெற இயலாத இப்பதவியில், மாநகராட்சியிலேயே பணிபுரிந்து ஓய்வு பெறும் நடைமுறைதான் இருந்து வருகிறது என்றும் உதவி ஆணையர் தெரிவித்துள்ளார். மேலும், 10.08.2018 நாளிட்ட தனது செயல்முறை ஆணை எண்.4341/2018–இல் திரு எம். பெரியசாமி என்பவர் 22–வது கோட்டவரி வசூல் பணியிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளார் என்று தெரிவித்துள்ளதுடன் 06.07.2018 நாளிட்ட முறையீட்டு மனுதாரரின் தகவல் அறியும் உரிமை சட்டம் மனு சம்பந்தமாக திரு எம். பெரியசாமி தாக்கல் செய்துள்ள கடிதத்தின் நகலினையும் சமர்ப்பித்துள்ளார். அக்கடிதத்தில் தெரிவிக்கப்பட்ட விவரங்களுக்கு 17 நபர்கள் கையொப்பமிட்டு சாட்சியமும் அளித்துள்ளனர்.

4. முறையீட்டு மனுதாரர் சட்ட விழிப்புணர்வுக்கான சமூக ஆர்வலர் எனத் தன்னைக் குறிப்பிட்டுள்ளார். "ஒரு குற்றம் நடக்க இருக்கிறது என்பதை தடுத்து நிறுத்த வேண்டிய பொறுப்பும், அதற்கான சட்டப்படியான வழிகளைக் கையாளவேண்டிய கடமையும், அது பற்றி தகவல் தெரிந்தவர்கள் சட்டப்பட்டி செயல் படாமல் இருப்பது 1860–ஆம் ஆண்டு இந்திய தண்டனைச் சட்டம், பிரிவு 2–இன் கீழ் குற்றம் " என்று கருதியே முறையீட்டு மனுதாரர் திரு எம். பெரியசாமி மீதான புகாரினைத் தெரிவித்துள்ளார். எனினும், அவர் குறிப்பிட்டுள்ள மேற்குறிப்பிட்ட சட்டப்பிரிவிற்கு மாறாக மேற்படி பணியாளரான திரு எம். பெரியசாமி அரசியல்வாதிகளோடு நெருங்கிய தொடர்பும் மற்றும் நட்பும் கொண்டுள்ளதாலேயே அவரைப் பற்றி புகார் எதுவும் உயர் அலுவலகத்திற்கு அனுப்பவில்லை என்றும் விசாரணையின் போது தெரிவித்துள்ளார். முறையீட்டு மனுவிலும் விசாரணையின் போதும் திரு எம். பெரியசாமி குறித்து எந்தவித ஊழல் குற்றச்சாட்டுகளும் தெரிவிக்கப்படவில்லை. மாறாக அவரை பணியிட மாறுதல் செய்வதே தனது கோரிக்கை என்றும் விசாரணையின் போது தெரிவித்துள்ளார். இந்நிலையில் எதிர்மனுதாரர் திரு எம். பெரியசாமி தனது 21.08.2018 நாளிட்ட கடிதத்தில் கீழ்க்காணும் தகவல்களைத் தெரிவித்துள்ளார் :-

(1) தான் வீடு கட்டுவதைக் கண்டு பொறாமைப் படுவது ;

(2) தன்னுடைய கட்டடத்திற்கு அடிக்கடி வந்து பணம் கேட்டு மிரட்டுவது ;

(3) தன்னையும், தனது தம்பியையும் நிம்மதியாக வாழவிடமாட்டேன் என்று கூறுவது;

(4) தகவல் அறியும் உரிமைச் சட்டத்தின் கீழ் தான் வீடு கட்டும் விவரங்களைக் கோருவது;

(5) தனக்கு ஏற்பட்டுள்ள மன உளைச்சலிருந்து தன்னை விடுவிக்கக் கோருவது.

திரு எம். பெரியசாமி மீது எந்தவித ஊழல் குற்றச்சாட்டும் தெரிவிக்காத நிலையில் அவரை பணியிட மாறுதல் செய்ய வைப்பதே முறையீட்டு மனுதாரரின் குறிக்கோளாக உள்ளது. அவரை பணியிட மாறுதல் செய்வதற்கான நடைமுறை இல்லை என்று உதவி ஆணையர் மற்றும் ஆணையாளர் தெரிவித்துள்ளனர். மேலும், மாநகராட்சிப் பணியாளரான திரு எம். பெரியசாமி தன்னை பொறாமை மற்றும் காழ்ப்புணர்ச்சி கொண்டு முறையீட்டு மனுதாரர் மிரட்டுவதாகவும் அவரிடம் பணம் கேட்டு தகராறு செய்வதாகவும் சூரமங்கலம் உதவி ஆணையரிடம் முறையிட்டுள்ளார்.இந்நிலையில், அனைத்தும் பரிசீலிக்கப்பட்டதில் முறையீட்டு மனுதாரர் மனுவின் மீது இம்முறைமன்ற நடுவம் நடவடிக்கை எடுத்திட எவ்வித சட்டபூர்வ ஆதாரங்களும் இல்லாத நிலையில் மனுவினை தள்ளுபடி செய்திட முடிவு செய்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2018 ஆம் ஆண்டு, **அக்டோபர்** திங்கள், **25–ஆம்** நாளன்று, என்னால் கையொப்பமிடப்பட்டு, அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப் படுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்.

29/10/18

பெறுநர்

1. **திரு வெ. ராஜூ,**
   **148, செங்கல் பேட்டை,**
   **நரசோதிபட்டி, அழகாபுரம் அஞ்சல்,**
   **சேலம் – 636 004.**

2. **மாநகராட்சி ஆணையர்,**
   **சேலம் மாநகராட்சி,**
   **சேலம்.**

நகல் : முறைமன்ற நடுவரின் நேர்முக எழுத்தர்
பிரிவு அலுவலர் (நிர்வாகம்)
பேரூராட்சி பிரிவு – 3
இ.கோ. / உதிரி